1968 ஆகஸ்ட் 30]

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : ராட்சச ஆலைகள் ஏற்படுத்துவதை விட சிறு சிறு குடிசைத் தொழில்களைப் போல 3 ஹார்ஸ் பவர், 4 ஹார்ஸ் பவர், ஏன் ½ ஹார்ஸ் பவர்கூட—ஜப்பான் நாட்டில் வைத்திருப்பதைப் போன்று நம் மாநிலத்திலும் அரிசி மில்கள் ஏற்பட அனுமதி கொடுக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்த முறையில்தான் தாராளமாக அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

திரு. என். வரதராஜன் : ரைஸ் மில்களை உடனடியாக தேசியமயமாக்காவிட்டாலும் நல்ல தரமான அரிசி மக்களுக்குக் கிடைக்கச் செய்ய அவற்றை லீசுக்கு எடுத்துக்கொள்ளும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்த மாதிரியாகவும், ஸ்டாச்சுடரி ரேஷன் ஏரியாவுக்கு அரிசி சப்ளை செய்ய தஞ்சை மாவட்டத்தில் சில அரிசி ஆலைகளை லீசுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். வேறு இடங்களிலும் மேற்கொண்டு தொடர்ந்து எடுக்கும் முறை பரிசீலனையில் இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that the Central Government are contemplating to nationalise all the rice mills in the country and if so, did the Central Government consult the State Government on this issue and also what is the opinion expressed by our State Government Also, how many rice mills are functioning in our State now ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : As regards the number of rice mills, the hon. Member can put a separate question.

Regarding nationalisation of rice mills, there was some talk about it during the session of the Congress at Bhuvaneswar but the State Government are not aware whether the Central Government have any such view or whether they have ever consulted the State Government.

கிணறுகள் ஆழப்படுத்த கடன்.

*** 200 வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கடன் பெற்று வெட்டப்பட்ட கிணறுகளில் தேவைப்படும் அளவு தண்ணீர் கிடைக்காமல் இருப்பதைப் போக்க மேலும் அவர்களுக்கு கிணறு ஆழப்படுத்த கடன் தரும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம். உறுப்பினர் குறிப்பிடுவதைப் போல கிணறு வெட்டக் கடன் தருவதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டம், பல்லடம், அவிநாசி, தாராபுரம், போன்ற இடங்களில் மூவாயிரம் ரூபாயில் கிணறு வெட்ட முடிவதில்லை. அந்தப் பணத்தை வாங்கி கிணறு வெட்ட ஆரம்பிக்கும்போது வேலை பாதியில் நின்றுவிடுகிறது. மேற்கொண்டு வெளியில் கடன்வாங்கி வெட்ட முடிவதும் இல்லை. அதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தண்ணீர் வருகின்ற வரையில் மேற்கொண்டும் அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அம்மாதிரி கடன் கொடுக்கவும் விதி முறைகளில் வாய்ப்பு இருக்கிறது. பூமியின் பெருமானம் 10 ஆயிரம் என்ருல், அதில் முக்கால் பங்கு 7,500 வரை கடன் பெறக்கூடும். பூமியின் மதிப்பு அப்போதைக்கு குறைவாக இருந்தாலும் கிணறு வெட்டுவதனுல் அதன் மதிப்பு உயரக் கூடும் என்கிறபோதும் கடன் உதவி அளிக்கப் படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : கிணறு வெட்டுவதற்கும், ஆழப்படுத்துவதற்கும் கடன் கொடுக்கப்படுகிறது. அந்த வேலையை முடிக்க சிறிது காலம் தாமதமாகிவிட்டது என்ருல் கூட தவணை முறைகளை ஒழித்து, உடனடியாக மொத்தப் பணத்தையும் கட்டவேண்டுமென்று உத்திரவு போடுகிருர்களே, அப்படி இன்றி தவணை முறையிலேயே வசூல் செய்வதற்கு உத்திரவு செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப் பற்றியும் பரிசீலனை செய்யலாம்.

திரு. மு. கிருஷ்ணமூர்த்தி : தமிழக அரசு ஏற்பட்ட பிறகு இதுவரை எத்தனை விவசாயிகளுக்குக் கிணறு வெட்டக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது ? மொத்த தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. பி. வேலுசாமி : கோவை மாவட்டத்தில் ஒரு கிணறு வெட்டுவது என்ருல் 100 அடி, 120 அடி வெட்ட வேண்டியதாக இருக்கிறது. அதை அனுசரித்து அந்த மாவட்டத்திற்குக் கிணறு வெட்டக் கடன் அளிக்கப்படும் தொகையை அதிகமாகக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்த முறையில்தான் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. தி. பொன்னுமலை : நாலாயிரம் ரூபாய் கிணறு வெட்டச் செலவாணுல் அரசு ஆயிரம் ரூபாய் மானியம் அளிக்கிறது. பதினைந்து அடி வெட்டியவுடன் பாறை வந்துவிட்டால் மிகக் கஷ்டமாகப் போய்விடுகிறது. ஆகவே, பாறை பகுதி முழுவதையும் எடுக்க என்ன செலவாகிறதோ அதை அரசு மானியமாக அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நல்ல யோசனை, அது பற்றி பரிசீலிக்கலாம்.

Extraction of Jasmine oil

*** 201 *Q*.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) whether there are schemes before the Government for the extraction of jasmine oil at the Horticultural Department, Coimbatore, and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) and (இ) கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த தோட்டக் கலைப் பிரிவில் மல்லிகைத் தைலம் எடுக்கும் திட்டம் எதுவும் இல்லை. எனினும் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் பூச்செடிகள் வளர்ப்புப் பிரிவை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் கீழ் பல இனங்கள் குறித்து நாளடைவில் ஆராய்ச்சி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. கண்கவர் வனப்புச் செடிகளை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மைத் தொழில் வாய்ப்புகள் குறித்து ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்வதும் அந்த ஆராய்ச்சி இனங்களில் ஒன்ருகும்.